(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 246/2019**

CNR.No. TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for. DW. 3

| | | |
|---|---|---|
| Name | : | சாமிநாதன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 15.12.2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் வேலகவுண்டம்பட்டி மானத்தி கிராமத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். 27.10.2018 ம் தேதி திருச்செங்கோடு மாரியம்மன் கோவில் விசேஷத்திற்காக நான் வந்திருந்தேன். காலை 10.30 மணியளவில் பழம் வாங்குவதற்காக தேர் வீதியில் உள்ள குமார் கடைக்கு சென்றிருந்தேன். கடை அடைக்கப்பட்டிருந்தது. பழக்கடை அருகே 5, 6 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். நிலத்தை அளக்க போவதாக பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் வக்கீல் ஒருவர் கோர்ட் உத்தரவு இருக்கா என்று கேட்டார். 1 மணி நேரமாக அவர்கள் அங்கு பேசிக்கொண்டிருந்தார்கள். அதற்கு பிறகு கூட்டம் கலைந்துவிட்டது. நானும் அங்கிருந்து சென்றுவிட்டேன்.

குறுக்கு விசாரணை.- இல்லை.

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 246/2019**

CNR.No.TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.DW. 4

Name : கந்தசாமி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 15.12.2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் சிக்கநாய்க்கன்பாளையத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். கடந்த வருடம் அக்டோபர் மாதம் 27ம் தேதி நான் பழம் வாங்குவதற்காக கடைக்கு சென்றேன். வழக்கமாக சிவக்குமார் பழக்கடையில் தான் பழம் வாங்குவேன். அவர் கடை அடைக்கப்பட்டிருந்தது. கடையை திறப்பதற்காக நான் காத்திருந்தேன். 10.30 மணியளவில் கடை அருகே சர்வேயர், காவல்துறையினர் மற்றும் சிலர் வந்து இடத்தை அளக்கபோவதாக சொன்னார்கள். வக்கீல் சரவணன் என்பவர் அங்கு வந்திருந்தார். அவர் ஏற்கனவே எனக்கு வழக்கு நடத்தியுள்ளார். வழக்கறிஞர் சரவணன் என்பவர் சர்வேயரிடம் எங்களுக்கு நோட்டிசே கொடுக்கவில்லை நோட்டிஸ் கொடுத்து தான் அளக்கவேண்டுமென்று சொன்னார். அதற்கு கமிஷனர் எழுத்துபூர்வமாக ஆட்சேபனை உள்ளதாக எழுதிகொடுங்கள் அவ்வாறு கொடுத்தால் நான் அளக்காமல் செல்வேன் என்று சொன்னார். மகேந்திரன் என்னிடம் எழுத சொன்னதால் நான் தான் ஆட்சேபனை மனுவை எழுதி கொடுத்தேன். அதை மகேந்திரன் ஆணையரிடம் கொடுத்தார். ஆணையர் நகலில் கையொப்பம் செய்து எங்களிடம் கொடுத்துவிட்டு ஆட்சேபனை மனுவை அவர் எடுத்து சென்றார். சர்வேயர் எல்லையை அளக்க ஆரம்பித்தார். வக்கீல் சரவணன் அவரிடம் நாங்கள் ஏற்கனவே ஆட்சேபனை கொடுத்துவிட்டோம், அளக்கவேண்டாம் என்று சொன்னார். ஒருவர் இடத்தின் உரிமையாளர் என்று சொல்லி நிலத்தை அளப்பதை வீடியோ எடுத்தார். அவர் அதன் பதிவு செக்ரட்டேரியட்க்கு அனுப்புவேன் என்று சொன்னார். எனவே நானும் எனது மொபைலில் வீடியோ எடுக்க ஆரம்பித்தேன். காவல் துறையினரும் வீடியோ எடுத்தார்கள். காவல்துறையினர் கன்னியப்பனிடமும், மகேந்திரனிடமும் புகார் கொடுக்க சொன்னார்கள். வக்கீல் சரவணன் என்னை

அழைத்ததால் நானும் வழக்கறிஞர் சரவணன் என்பவரும், கன்னியப்பனும் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம். காவல் நிலையத்தில் இரண்டு பெண் உதவி ஆய்வாளர்கள் இருந்தார்கள். அவர்கள் வழக்கறிஞர்கள் உள்ளே வரக்கூடாது என்று சொன்னார். அதற்கு கன்னியப்பன் என்னுடைய வழக்கறிஞர் தான், புகார் கொடுப்பதற்காக வந்தோம் என்று சொன்னார். எனவே வழக்கறிஞர் வெளியே சென்றுவிட்டார், நாங்கள் புகார் கொடுத்தோம். மதியம் 2.00, 3.00 மணியளவில் சிஎஸ்ஆர் கொடுத்தார்கள். வழக்கறிஞரை வெளியே போக சொன்னதால் வக்கீல்கள் boycott செய்தார்கள்.

குறுக்கு விசாரணை.- இல்லை.